DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC. NO.118 /2020**

Deposition of witness for Prosecution **ம.சா.3**

Name : அகில் ஜே விஜயன்
Father/ Husband Name : விஜய சிம்ஹறன்
Village : தேவகோட்டை
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.09.2025.

**முதல் விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டை கனரா வங்கி கிளையில் மேளாலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி எங்கள் வங்கி கணக்கில் தான் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண் 2803101012311. எதிரியின் வங்கி கணக்கில் 01/04/2018 முதல் 31/03/2019 வரை பரிவர்த்தனைகளுக்கான கணக்குப் பட்டியல் சான்றிட்ட நகல் கொண்டு வந்துள்ளேன். (**மேற்படி கணக்கு பட்டியல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 04/03/2019 தேதியிட்ட எதிரி கொடுத்த ரூபாய் இரண்டரை லட்சத்திற்கான காசோலை எண் 284867 ற்கான பதிவில்

ம.சா.ஆ.9 ல் உள்ளதா என்றால் பணம் எடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே பதிவு இருக்கும், அவருடைய கணக்கில் பணம் இல்லை.

2. ம.சா.ஆ.3 எங்கள் வங்கியால் வழங்கப்பட்டதுதான். எனக்கு அனுப்பட்ட அழைப்பாணையில் 01/04/2018 முதல் 31/03/2019 வரையிலான காலக்கட்டத்திற்கான பரிவர்த்தனைகளைப் பற்றி மட்டும் தான் கேட்டிருந்தார்கள். மேற்படி காலக்கட்டத்திலும் அதற்கு பின்பும் எதிரியின் வங்கிக் கணக்கில் எந்த பரிவர்த்தணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 01/04/2018 க்கு முன்பு எதிரியின் கணக்கில் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை அழைப்பாணையில் குறிப்பிட்டுக் கேட்காததால் நான் அதை பார்க்கவில்லை. எதிரி டெர்ம் லோன் வாங்கி விட்டு கட்டவில்லை என்பதை ஆவணங்களை பரிசோதிக்கும்போது தெரிந்துகொண்டேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)**

<u>மறு விசாரணை :</u> இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.